7413

Reg. No. 124110

# மேல்நிலை இரண்டாமாண்டு அரையாண்டுத் தேர்வு, டிசம்பர் - 2017

நேரம் : 3-00 மணி] **வணிகவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 200

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

40×1=40

## பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பதிவு கட்டாயமாக்கப்பட்ட அமைப்பு : அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டு பங்கு நிறுமம் ஈ) இந்து கூட்டுக் குடும்பம்
2. கூட்டுப்பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது :
   அ) நிறும பதிவாளரிடம் ஆ) இயக்குனரவையிடம்
   இ) பங்குதாரர்களிடம் ஈ) கடன் பத்திரர்களிடம்
3. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது :
   அ) விரைவாக ஆ) தாமதமாக இ) இரண்டுமில்லை
4. கூட்டாளிகளுக்கு ஓர் உடன்பாட்டின்படி உரிமை வழங்கப்பட்டிருப்பின் அது ----- ஆகும்
   அ) உட்கிடை ஆணையுரிமை ஆ) வெளிப்படை ஆணையுரிமை
   இ) இவற்றில் எதுவுமில்லை
5. ஒவ்வொரு கூட்டாளிகளும் தொழிலுக்கு வழங்கிய முன்பணம் மற்றும் கடன் மீது ஆண்டுக்கு ---- சதவீதம் வட்டி பெற உரிமையுண்டு
   அ) 6% ஆ) 10% இ) 12% ஈ) 5%
6. ----- வயது பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம்
   அ) 15 ஆ) 16 இ) 18 ஈ) 25
7. கூட்டாண்மையில் தோன்றும் உறவுமுறை :
   அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையாளர் மற்றும் வேலையாள்
   இ) எஜமானர் மற்றும் பணியாளர்
8. பொது நிறுமத்தில் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை :
   அ) 2 ஆ) 3 இ) 7 ஈ) 10
9. ஒரு தனி நிறுமத்தில் உறுப்பினர்களின் பொறுப்பு :
   அ) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பு ஆ) பங்குகளின்மீது செலுத்தப்பெறாத மதிப்பு
   இ) தனிப்பட்ட சொத்தின் மதிப்பு ஈ) அழைக்கப்பட்ட பங்குமுதல்
10. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்நிறுமத்திற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது ? அ) ரூ. 500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் ஆ) ரூ. 5000000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் இ) ரூ. 2500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் ஈ) ரூ. 1500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
11. ----- எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குனர் பதவி வகிக்கலாம்
    அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) வரம்பில்லை
12. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் :
    அ) நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டை
    ஆ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொது காப்பிருப்புத் தொகையில் 11 விழுக்காட்டை
    இ) நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டை
    ஈ) செலுத்தப்பட்ட முதல் மற்றும் பொது காப்பிருப்புத் தொகையில் 5 விழுக்காட்டை
13. கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே — என்று கூறப்படுகிறது
    அ) நிகழ்ச்சிநிரல் ஆ) நிகழ்ச்சி குறிப்பு இ) தீர்மானம் ஈ) குறைவெண்
14. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை :
    அ) பொது விடுப்புகள் ஆ) விற்பனைக்கான தருமொழி
    இ) மேலாண்மைத் தரகர்கள் ஈ) ஒப்புறுதியளித்தல்
15. பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ---- எனப்படும்
    அ) ஒப்புறுதியளித்தல் ஆ) வியாபாரம் இ) பங்கு ஒதுக்கீடு ஈ) பட்டியலிடுதல்
16. ----- என்பது பங்குகளை வாங்க பொதுமக்களுக்கு விடுக்கும் ஒரு அழைப்பாகும்
    அ) அமைப்பு முறையேடு ஆ) சட்டமுறை அறிக்கை இ) தகவலறிக்கை
    ஈ) ஆண்டு அறிக்கை
17. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது :
    அ) கிராமங்களில் ஆ) மாவட்ட தலைநகரங்களில் இ) மாநில தலைநகரங்களில்
    ஈ) நகர்ப்புறங்களில்
18. ஒரு கூட்டுறவு சிறப்பங்காடி அளிப்பது :
    அ) கடன் ஆ) சேவை இ) சரக்குகள் ஈ) ரொக்கம்
19. அரசு நிறுமம் இவற்றின்கீழ் பதிவு செய்யப்படுகின்றது :
    அ) மைய மாநில அரசின் தனிச்சட்டம் ஆ) அரசாணை
    இ) இந்திய நிறுமச் சட்டம் 1956 ஈ) அரசியல் அமைப்புச் சாசனம்
20. பொது கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது :
    அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் ஆ) செயல்பாட்டுச் சுதந்திரமின்மை
    இ) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

(திருப்புக

II கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. ஒப்படைவு என்பது ----- என்பதாகும்
22. தொழில் அமைப்புகளில் மிகவும் பழமையான வடிவம் ------.
23. தனி வணிகரின் பொறுப்பு ------.
24. ----- என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.
25. வரையறுத்த கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு கண்டிப்பாக ----- இருக்க வேண்டும்
26. எந்த விகிதமும் உடன்பாட்டில் இல்லையென்றால் கூட்டாளிகளின் இலாபநட்டத்தை ---- பங்கிட்டுக் கொள்கிறார்கள்.
27. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமை பங்குகள் ---- என அழைக்கப்படுகின்றன.
28. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ------ இயக்குனர்களாவது இருக்க வேண்டும்
29. அழைப்புப் பணத்தைச் செலுத்தாதக் காரணத்தால் ஒரு உறுப்பினரின் பங்குகளை நிறுமம் பறிமுதல் செய்தல் ---- எனப்படும்.
30. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு ——.
31. நிறுமத்தின் முதலாவது இயக்குனர்கள் வழக்கமாக ----ல் பெயரிடப்பட்டிருப்பர்.
32. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான -------.
33. பொதுவாக தணிக்கையர் ----- கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்
34. பங்குகள் ------ உரிமையைக் குறிக்கும்.
35. விண்ணப்பத் தொகை ஒரு பங்கின் மதிப்பு தொகையில் ---- குறைவாக இருத்தல் கூடாது.
36. இந்தியாவில் ----- பிராந்திய பங்கு மாற்றகங்கள் உள்ளன.
37. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு ------.
38. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் மேலாண்மை ---- தன்மை கொண்டது
39. ----- என்பது அரசுக்கு சொந்தமானதாகவும், அதன் கட்டுப்பாட்டிற்குட்பட்டும் இயங்கும் தொழிலமைப்பாகும்.
40. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் -------.

## பகுதி-ஆ

10 × 4=40

குறிப்பு : (i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
(ii) ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு வரிகட்கு மிகாமல் விடையளிக்கவும்.

41. பொதுக் கூட்டுரு என்றால் என்ன ?
42. தனியாள் வணிக அமைப்பு என்றால் என்ன ?
43. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறுக.
44. கூட்டு மற்றும தனி பொறுப்பு என்றால் என்ன ?
45. கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவுமுறை யாது ?
46. கடனீட்டுப் பத்திரம் வரைவிலக்கணம் தருக.
47. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன ?
48. குறிப்பு வரைக : நிகழ்ச்சி நிரல்
49. சிறப்புத் தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும் ?
50. குறும் பங்கொப்பம் என்றால் என்ன ?
51. பத்திரம் என்றால் என்ன ?
52. கூட்டுறவுச் சங்கத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளை தருக.
53. கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கங்கள் யாது ?
54. இராணுவம் சார்ந்த தொழில்களுக்குத் துறைமுக அமைப்பே சிறந்ததென எதனால் கூறப்படுகிறது ?
55. பொது கழகத்தின் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி-இ

5 × 8=40

குறிப்பு : (i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
(ii) ஒவ்வொன்றிற்கும் ஒருபக்க அளவிற்கு மிகாமல் விடையளி

56. ஏதேனும் இரண்டு தனிநபர் அமைப்பைப் பற்றி விவரி.
57. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை பற்றி விவரி.
58. முறைகேடான ஒதுக்கீடு குறித்து குறிப்பு வரைக.
59. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை ? (ஏதேனும் எட்டு)
60. சட்டமுறை அறிக்கையில் காணபெற வேண்டியவை யாவை ?
61. முதலீட்டாளர் ஊக வணிகர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?
62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து, அதன் சிறப்பு இயல்புகளை தருக.
63. பொது கழகத்தின் இயல்புகள் யாவை ? (எவையேனும் எட்டு எழுதுக)

## பகுதி-ஈ

4 × 20=80

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்
(ii) ஒவ்வொன்றிற்கும் இரு பக்க அளவிற்கு மிகாமல் விடையளி

64. அ) பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் மற்றும் எடுத்துக்காட்டுகளை தருக. (அல்லது)
ஆ) துறைவாரி அமைப்பின் நிறை (5) குறைகளை (5) விளக்குக.
65. அ) தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் பத்தினை விவரி. (அல்லது)
ஆ) விளக்க குறிப்பு தருக : (i) பகராள் (ii) குறைவெண் (iii) நிகழ்ச்சி குறிப்பேடு (iv) மாற்று இயக்குனர்
66. அ) தனியாள் வணிகம் - கூட்டாண்மை வேறுபடுத்துக. (அல்லது)
ஆ) பல்வகையான கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து விளக்குக.
67. அ) பங்கு மாற்றகத்தின் இயல்புகள் பணிகளை விவரி. (அல்லது)
ஆ) ஏதேனும் எட்டு கூட்டுறவு சங்கத்தின் வகைகளை விவரி.